**4.2.2015**

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>சிவகங்கை மாவட்டத்தில் 3.95 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்திக்கு இலக்கு: மாவட்ட ஆட்சியர்</u>

சிவகங்கை மாவட்டத்தில் 2014- 15 ஆம் ஆண்டில் 3 லட்சத்து 95 ஆயிரத்து 720 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்தார். தமிழகத்தில் வேளாண் துறை சார்பில் இருமடங்கு உற்பத்தி மும்மடங்கு வருமானம் என்ற குறிக்கோளை அடையும் வகையில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பருவமழை குறைவாக பெய்த நிலையிலும், 2011- 12 மற்றும் 2013-14 ஆம் ஆண்டுகளில் உணவு சாதனை அடையப்பட்டு கடந்த ஆண்டில் (2013-14) ஆம் ஆண்டில் 110.65 லட்சம் மெட்ரிக் டன் என்ற நிலையை அடைந்துள்ளது. விரிவாக்கப் பணிகளை மேலும் செம்மைப் படுத்தி, விளைபொருள் உற்பத்தியை உயர்த்தி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பண்ணையளவில் விவசாயிகளை ஒருங்கிணைத்து, தொடர்புடைய கிராமத்தில் உள்ள பயிர் சாகுபடிக்கு ஏற்ப விளைபொருள் குழுக்களை அமைத்து குறிப்பிட்ட கால அளவில், குறிப்பிட்ட கிழமையில் விவசாயிகளை நேரடியாக சந்தித்து பயிர் சாகுபடி தொடர்பான தொழில் நுட்பங்களை எடுத்துரைக்கப்படும் என வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி கூறுகையில், ஒவ்வொரு ஊராட்சியிலும் திங்கள் முதல் வியாழன் வரை விவசாயம் தொடர்பான தொழில் நுட்ப செய்திகள், விளக்கங்களை வேளாண் அதிகாரிகள் செய்து காட்டுகின்றனர். இதன் மூலம் 2014-15 ஆம் ஆண்டில் 91,900 எக்டரில் 3

லட்சத்து 95 ஆயிரத்து 720 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>25 சென்ட் நிலத்தில் 60 நாளில் 8 டன் வெள்ளரி</u>



தமிழகம் பொன்னு விளையும் பூமி என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. தழைச்சத்து முதல் இரும்புச்சத்து வரை அனைத்தும் தமிழ் மண்ணில் பொதிந்து கிடக்கிறது. பெருகி வரும் மக்கள் தொகையால் பொன்னான விளை நிலங்கள் பிளாட்டுகளாக மாறி வருவது வேதனைக்குரியது. எனினும் மண்ணையும், மண் வளத்தையும் பாதுகாக்கும் விழிப்புணர்வு இளைய தலைமுறையினருக்கு ஏற்பட்டு வருவது ஆறுதல். சுற்றிலும் வீடுகள், போக்குவரத்து நெரிசல் மிகுந்த மதுரை வீரபாஞ்சான் பகுதியில் 25 சென்ட் நிலம் உள்ளது. இந்த இடத்தில் அழகான பங்களா கட்டலாம் அல்லது குடோன் நடத்த வாடகைக்கு விடலாம். வேறென்ன செய்ய முடியும்?என கேட்கலாம். சிறிய அந்த இடத்தில் "பசுமை குடில்' அமைத்து 60 நாட்களுக்கு ஒருமுறை 8 டன் வெள்ளரியை அள்ளுகிறார் சிவில் இன்ஜினியரிங் பட்டதாரி லோகேஷ்,27, என்றால் நம்ப முடிகிறதா? இஸ்ரேல் தொழில் நுட்ப உதவியுடன் வெள்ளரிக்காய் உற்பத்தி செய்கிறார். தோட்டக்கலைத்துறை 50 சதவீதம் மானியம் வழங்கியது. இஸ்ரேல் வெள்ளரி விதை ஒன்றின் விலை ரூ.7. தனது 25 சென்ட் நிலத்தில் 1000 சதுர மீட்டர் அளவில் "பசுமை குடில்' அமைத்தார்.

இதற்குள் 28 டிகிரி வெப்பம் நிலவ வேண்டும். தட்பவெப்ப நிலை வெப்பமானி மூலம் அறியப் படுகிறது. வெப்பம் கூடினால் தானியங்கி மூலம் தண்ணீர் தெளித்து கட்டுப்படுத்துகின்றனர். பசுமை குடிலில் 4,500 விதைப்பைகளில் தலா ஒரு விதை மூலம் வெள்ளரி செடி வளர்க்கப் படுகிறது. விதை பையில் மண்ணிற்கு பதில் தென்னை நார் மட்டுமே இருக்கும். பசுமை குடிலுக்குள் பூச்சிகள் நுழைய இயலாது. சொட்டுநீர் பாசனம் மூலம் அனைத்து விதைப்பைகளுக்கும் சமச்சீராக தண்ணீர் பாய்ச்சப்படும். தேவைக்கு ஏற்ப "இயற்கை சத்து டானிக்' தெளிக்கப் படுகிறது. விதை விதைத்து 46வது நாளில் இருந்து தொடர்ந்து 60 நாட்களுக்கு பலன் கிடைக்கிறது. நாள் ஒன்றுக்கு சராசரியாக 250 கிலோ வெள்ளரி கிடைக்கிறது. ஏஜென்டுகள் மூலம் மொத்தமாக கொள்முதல் செய்து அரபு நாடுகளுக்கு கிலோ ரூ.250 விலையில் பெருமளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இன்ஜினியரிங் விவசாயி லோகேஷ் கூறியதாவது: "ஏ.எஸ். பார்ம்' என்ற பெயரில் "ஹைடெக் ஹார்ட்டிகல்சுரல்' மூலம் வெள்ளரி உற்பத்தி செய்கிறேன். மதுரை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ஜெயசிங்ஞானதுரை, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தேன்மொழி ஆகியோரின் வழிகாட்டுதல் தொடர்கிறது. இரண்டரை ஏக்கர் நிலத்தில் விளையும் வெள்ளரியை வெறும் 25 சென்ட் நிலத்தில் விதைத்து லாபம் ஈட்டி வருகிறேன். பிஞ்சு இருக்காது; பழமும் வராது. வெள்ளரி ஒன்று தலா 110 கிராம் எடையில் இருக்கும். செடி ஒன்றுக்கு 60 நாட்களுக்கு 300 மில்லி தண்ணீர் மட்டும் போதும். காயின் தண்ணீர் சத்து குறித்து தினமும் ரசாயன முறையில் பரிசோதனை செய்து அதற்கு ஏற்ப சத்துக்கள் செலுத்தப்படுகிறது. இதனால் சுவை, மணம், சத்து மாறாது. கடந்த முறை 7 டன் வெள்ளரி எடுத்தேன். இந்த முறை 8 டன் கிடைத்தது. பசுமை குடிலை இத்தாலி, இஸ்ரேல் விஞ்ஞானிகள் பார்வையிட்டுள்ளனர். அடுத்ததாக வெற்றிலை, இஞ்சி, மல்லியை உற்பத்தி செய்யவுள்ளேன். விதையை இங்கேயே உற்பத்தி செய்யும்

ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளேன் என்றார். 93624 44441ல் தொடர்பு கொள்ளலாம். **-கா.சுப்பிரமணியன், மதுரை.**

***<u>சின்ன சின்ன செய்திகள்</u>***



**பனங்கிழங்கு *சாகுபடி*:** பனங்கிழங்கு சாகுபடியை தொடர்ந்து வருபவர்களில் திருநெல்வேலி மாவட்டம், பாறைக்குளம் அருகிலுள்ள மேலபுத்தனேரி கிராமத்தைச் சேர்ந்த மகேந்திரன் தெரிவித்துள்ள தொழில்நுட்பங்கள் அவருடைய 5 பனை மரங்களிலிருந்து 400 பனம் பழங்கள் கிடைக்கும். ஒரு பழத்தில் மூன்று கொட்டைகள் உண்டு. கொட்டைகளை தனியாக பிரித்து ஒரு வாரம் நிழல் காய்ச்சல் விட்டு நிலத்தில் 6 அடி நீளம், 3 அடி அகலத்தில் பாத்தி பிடிச்சு அதில் கொட்டையோட மேல்புறம் வானத்தை பார்த்து இருக்குமாறு நெருக்கமா விதைக்கனும். செம்மண்ணையும், ஆத்து மணலையும் கலந்து போட்டால் நல்லா வளரும். மண்ணுள் சின்ன கல்லுகூட இருக்கக் கூடாது. கொஞ்சம் எரு போட்டு விட்டா கிழங்கு பெருவெட்டா கிடைக்கும். விதைச்சதும் தண்ணீர் தெளித்து விடனும். பிறகு வாரம் ஒருமுறை தண்ணீர் தெளிச்சா போதும். பனம்பழ வாசத்துக்கு கோழிகள் வரும். அது தோண்டி விடாமல் இருக்க முள் போட்டு பாதுகாக்கனும். புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் கொட்டையை விதைச்சா மார்கழி, தை மாதங்களில் கிழங்காயிடும். கிட்டத்தட்ட 70 நாள்ல கிழங்காயிடும். கிழங்கைப் பிடுங்கி கொட்டையைத் தனியாகவும், காம்பைத் தனியாகவும் வெட்டிடனும். கொட்டையை இரண்டா வெட்டினா உள்ளே இலவம் பஞ்சு நிறத்துல "தவுன்' இருக்கும். தவுன் எடுத்ததுக்கு அப்புறம் கொட்டையை காயவெச்சு அடுப்பு எரிக்கலாம். மரம் இல்லாத போது பனம் பழம் ஒன்று ஒரு ரூபாய்னு விலைக்கு வாங்கி கிழங்கு போடலாம். ஒரு கிழங்கை 3 ரூபாய்க்கு விற்கலாம்.

**பேயெள் சாகுபடி:** கிருஷ்ணகிரி மாவட்டம், கர்நாடக எல்லையை ஒட்டியுள்ள தேன்கனிக்கோட்டை பகுதியில் ஊடுபயிராக பேயெள் பயிர் செய்யப்படுகிறது. பேயெள்ளுங்குறது பார்ப்பதற்கு சூரியகாந்திப்பூ மாதிரி இருக்கும். பூக்கள் சிறியதாக இருக்கும். பூவுக்குள் தான் விதை இருக்கும். விதைப்புக்கு ஆடிப்பட்டம் ஏற்றது. விதைக்கும் போது நிலத்தை 2 சால் உழவு செய்து, 1 சென்டுக்கு 100 கிராம் விதையை அரை கிலோ மணலோடு கலந்து நெருக்கமாக விதைப்பு செய்யனும். ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். முளைப்பு வந்த பிறகு ஒருமுறை களை எடுக்க வேண்டும். தொடர்ந்து 20 நாட்களுக்கு மழை இல்லாவிட்டாலும் தாக்கு பிடிக்கும். 20-25 நாட்களுக்கு ஒரு தண்ணீர் கொடுத்தாக் கூட போதும். நல்ல மழை கிடைச்சு நிலத்தில் ஈரம் இருந்தால் நிறைய இலைகள் விட்டு அதிக மகசூல் எடுக்க முடியும். 180 நாட்களில் அறுவடைக்கு வந்து விடும். செடியோட அடிப்பகுதியை விட்டு விட்டு அறுவடை செய்து 4 நாட்கள் காயவைத்து கையில் தட்டி எள்ளை பிரித்தெடுக்கலாம். நல்லெண்ணெய், விளக்கெண்ணெயை விட கூடுதல் மருத்துவ குணம் நிறைந்தது. பேயெள் எண்ணெய் சில ஆண்டுகளுக்கு முன் பையூர் மண்டல வேளாண் ஆராய்ச்சி நிலையம் "பையூர்' என்ற பேயெள் ரகத்தை வெளியிட்டது. விதை 1 கிலோ ரூபாய் 50 என்ற விலையில் கிடைக்கிறது. தொடர்புக்கு: மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பையூர், கிருஷ்ணகிரி மாவட்டம். போன் : 04343 - 290 600. நெல் வயலுக்கேற்ற புதிய தலைமுறை களைக்கொல்லி "ஈரோஸ்' : நெல் நாற்று நடவாகி 3 நாட்களுக்குள் இட வேண்டும் ஏக்கருக்கு 4 கிலோ அளவில். முக்கால் அங்குலம் உயரத்திற்கு தண்ணீர் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். "ஈரோஸ்' இட்ட பிறகு 1 வாரத்திற்கு நீர் அடுத்த நிலத்திற்கு வடிந்து விடாமல் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். இது ஒரு UPL (United Phosphorus Limited) வெளியீடு.

மேலும் விபரங்களுக்கு மதுரை, ராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை - 94425 02343, தேனி - 94425 02337, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி - 04422 38397, சேலம், நாமக்கல் - 94437 38397, திண்டுக்கல் - 94437 38392, ஈரோடு- 9443738393. - **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**<u>துயர் தீர்க்கும் துளசி</u>**



துளசியில் பல ரகங்கள் உள்ளன. எனினும், பொதுவாக அனைத்து ரகங்களும் கோழையை நீக்கும். சரீரத்திற்கு வெப்பம் அளிக்கும். வியர்வையைப் பெருக்கும். காய்ச்சல், நீர் வேட்கை, சுவையின்மை, இருமல், இரைப்பு, சளி முதலான பிணிகளைப் போக்கும். மூக்கிலிருந்து நீரால் ஏற்படுகின்ற அனைத்து தொந்தரவுகளிலிருந்தும் இது விடுதலை அளிக்கும். துளசி இலைகளைப் பச்சையாக மென்று தின்பது மிகவும் நல்லது. துளசியை உலர்த்திப் பொடியாக்கி மருந்தாகவும் தயாரிக்கலாம். அரை டீ ஸ்பூன் துளைசித் தூளைத் தேனில் கலந்து ஒரு நாளைக்கு இருவேளை உட்கொண்டு சுகம் பெறலாம். துளசிச் செடியை வளர்ப்பது மிக எளிது. விதைகள் மூலமாக இது விருத்தியாகின்றது. தூள் போன்றுள்ள துளசி விதைகளை பரந்த நிலத்தில் வளர்த்தல் மிகவும் சிக்கனமான விவசாயத் தொழிலாகும். ஒரு எக்டேருக்கு ஏறத்தாழ இருநூறு கிராம் விதைகள் போதுமானது என்பது உரிய விவசாயிகளின் அனுபவ கணக்கு. எந்த வகை மண்ணிலும் இதைப் பயிரிடலாம். நிலத்தை மூன்று முறை நன்றாக உழுது பண்படுத்தி நேரடியாக விதைகளை விதைத்து அல்லது நாற்றுகளை பிடுங்கி நட்டு சாகுபடி செய்யலாம். வறட்சியைத் தாங்கக் கூடிய பயிர் இது என்பதால் வாரம் ஒருமுறை நீர்ப்பாசனம் செய்தல் நலம். விதைத்த பின்பு நூறு நாட்கள் கழித்து தழையைப் பெறுவதற்கு அறுவடை செய்யலாம். இரண்டு மாதங்கள் பிற்பாடு மீண்டும் அறுவடை செய்யலாம். துளசிச் செடிகளை

ஆடு மாடுகள் சாப்பிடுவதில்லை என்பதால் விவசாயத் தொடர்பான பராமரிப்பு மிக எளிதாக அமையும் எனலாம். மருத்துவ முறையிலே துளசி இலைகளை உதிர்த்துப் போட்டு கஷாயம் இறக்கி தேன் கலந்து பருக நெஞ்சிலுள்ள சளி இலகுவாக வெளியேறும். மழைக்காலத்தில் அல்லது பனிக் காலத்தில், பனங்கற்கண்டு இட்ட சூடான துளசி டீ அருந்துதல் நன்மை தரும். "ஐயம், வயிறு உளைச்சல், அஸ்தி சுரம், தாகம், சுர மாந்தம், அரோசகம் போகும் வன் காரச் சூடுள்ள தூய துளசியால்" என்பது சித்தரின் சித்தம். துளசியை மூலப்பொருளாகக் கொண்டு துளசித்தேன், துளசிப் பற்பொடி, துளசி சோப், துளசித் தைலம், துளசி கற்பம், துளசி ட்ரிங்க், துளசி இலைத்தூள் முதலான புதிய படைப்புகள் நடைமுறையில் உள்ளன. டானிக், பெப்பர்மின்ட், சாக்லேட் ஆகிய வற்றின் தயாரிப்புகளிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது. துளசி ஒரு நறுமணப் பண்டம் (ஸ்பைஸ்) என்றால் அதை நீங்களும் நம்புகின்றீர்களா? **- எஸ்.நாகரத்தினம், விருதுநகர்.**

## <u>கோழிக்கழிச்சல் நோய்தடுப்பூசி முகாம்</u>

ஈரோடு:ஈரோடு மாவட்டத்தில், கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி போட, இருவாரத்துக்கு முகாம்கள் நடக்க உள்ளதாக, கலெக்டர் பிரபாகர் தெரிவித்தார். இதுபற்றி, கலெக்டர் பிரபாகர் கூறியதாவது:கோழி வளர்ப்போருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தும், கழிச்சல் எனப்படும் வெள்ளைக்கழிச்சல் நோயை கட்டுப்படுத்தி, பொருளாதார இழப்பை தடுக்கும் பொருட்டு, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது.நடப்பாண்டில், வரும், 9 முதல், 22ம் தேதி வரை, ஈரோடு மாவட்டத்தில், அனைத்து கிராம பகுதிகளிலும், மாலை நேரங்களில் தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது.இதன் மூலம், கோழிகளை வளர்ப்போர், தங்களது கோழிகளுக்கு தடுப்பூசி போட்டு, வெள்ளை கழிச்சல் நோய்கள் வராமல் தடுக்கலாம், என்றார்.

## நாகையில் சிரிக்கும் செவ்வந்தி கோலோச்சும் கடலோர விவசாயிகள்

நாகப்பட்டினம் ;நாகை,கடலோரப் பகுதிகளில் காய்கறிகள் சாகுபடியில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் தற்போது அதிக லாபம் தரும் செவ்வந்தி பூ சாகுபடியில் ஆர்வம் காட்டி வருவதால்,கடலோர பகுதி முழுவதும் கண்களுக்கு குளிர்ச்சியாக செவ்வந்தி பூ காட்சியளிக்கிறது. நாட்டின் எந்த பகுதியிலும் வளரக்கூடிய தன்மையுடையது செவ்வந்தி பூ.மஞ்சள், சிகப்பு,ஆரஞ்ச்,வெள்ளை நிறத்தில் பூக்கும் செவ்வந்தி ஏராளமான மருத்துவ குணங்களை உடையது.விவசாயிகளுக்கு நல்ல லாபத்தை தருவதால்,காய்கறி சாகுபடிக்கு அடுத்தப்படியாக செவ்வந்தி பூ சாகுபடியில் நாகை மாவட்ட கடலோர விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.ஆடி மாதம் நிலத்தை உழுது விதை தெளிக்கும் விவசாயிகள், ஆவணியில் செடிகளை நட்டு தண்ணீர் பாய்ச்சி,சாணி உரமிட்டு பராமரிப்பில் ஈடுபடுகின்றனர்.ஐப்பசியில் பூக்கள் பூக்க துவங்கியதும் லேசான அளவில் டி.ஏ.பி.,உரத்தினை செடிகளுக்கு தருகின்றனர்.இதையடுத்து பூத்துக் குலுங்கும் பூக்களை அறுவடை செய்யும் விவசாயிகளிடம்,கிலோவுக்கு 60 ரூபாய் விலை நிர்ணயித்து வியாபாரிகள் கொள்முதல் செய்து செல்கின்றனர். மற்ற பூக்கள் போல் இல்லாமல் 10 நாட்கள் வரை செடிகளிலேயே பூக்கள் வாடாமல் இருப்பதால்,விவசாயிகளுக்கு பாதிப்பில்லை. தேவைக்கேற்ப ஒரு ஏக்கரில் நாளொன்றுக்கு 60 கிலோ வரை பூக்களை அறுவடை செய்கின்றனர்.ஒரு ஏக்கர் நிலத்தில் உழுது,பாத்திகட்டி,செடி நட்டு,தண்ணீர் பாய்ச்சு பராமரிக்க 7 ஆயிரம் ரூபாயில் இருந்து 8 ஆயிரம் ரூபாய் வரை செலவழிக்கும் விவசாயிகளுக்கு,ஐப்பசி மாதத்தில் பூக்கத் துவங்கும் பூ தொடர்ந்து கார்த்திகை,மார்கழி,தை,மாசி மாதம் வரை விவசாயிகளுக்கு வருவாய் ஈட்டித் தருகிறது. நாகை மாவட்ட கடலோர பகுதிகளில் நெல் உற்பத்திக்கு மாற்றுத் தொழிலாக காய்கறி உற்பத்தியில்

ஈடுபட்டிருந்த விவசாயிகள் தற்போது லாபம் தரக்கூடிய செவ்வந்தி பூ சாகுபடியில் கவனம் செலுத்தி வருகின்றனர். செல்வராஜ்,62 என்ற விவசாயி கூறியதாவது,நாகை மாவட்ட கடலோர பகுதியில் நாகையில் இருந்து வேதாரண்யம் வரையிலான பகுதியில் தோட்டப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கான மணல் பகுதி உள்ளதால்,வேர்கடலை, கத்திரி,புடலங்காய்,கொத்தவரங்காய் சாகுபடி செய்து வந்தோம். தற்போது செவந்தி பூவிற்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளதால் செவந்தி பூ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். மங்கள நாட்களில் நல்ல விலை கிடைக்கும் என்றாலும் மற்ற நாட்களில் சராசரியான விலையே இருக்கும்.10 நாட்கள் வரை செடிகளிலேயே பூக்கள் தாக்குப்பிடிக்கும் என்பதால் அதிகளவில் பாதிப்பில்லை.தனியார் வியாபாரிகள் நிர்ணயிக்கும் விலைக்குதான் பூக்கள் விற்கப்படுகிறது. நெல் உற்பத்திக்கு மாற்றுத் தொழிலாக இருக்கும் பூக்கள் சாகுபடிக்கு அரசு உதவிக்கரம் நீட்டினால் பூ சாகுபடி பிரகாசிக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகள் சங்க கூட்டம்

மரக்காணம்: மரக்காணம் ஒன்றிய விவசாயிகள் சங்க கூட்டம் செட்டிக்குப்பத்தில் நடந்தது. விவசாய சங்க தலைவர் பாஸ்கரன் தலைமை தாங்கினார், பொருளாளர் லோகு வரவேற்றார், துணைத் தலைவர் சீனுவாசன் முன்னிலை வகித்தார். ஒன்றிய செயலாளர் சுந்தரமூர்த்தி சிறப்புரையாற்றினார். அரசு ஏரி, குளங்களை தூர் வாரி வரத்துக் கால்வாய்களை சீரமைக்க வேண்டும். கூனிமேட்டில் பறவைகள் சரணாலயம் அமைக்க வேண்டும். விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ராமலிங்கம் நன்றி கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## கறிவேப்பிலை பயிரிட விவசாயிகள் ஆர்வம்

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் வீராணம் ஏரி மேற்கரையில் கறிவேப்பிலை கன்றுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர். சிறந்த வடிகால் வசதி உடைய சமப்படுத்தப்பட்ட செம்மண் பரப்பில், விதைகள் தூவப்பட்டு குறிப்பிட்ட கால இடைவெளியில் பாத்திகளில் தண்ணீர் தெளிக்கப்படுகிறது, ஒரு வருடம் முடிந்தவுடன் கன்றுகளை விற்பனைக்கு அனுப்பலாம். இங்கு உற்பத்தியாகும் கன்றுகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. நடவு செய்த ஒரு வருடம் கழித்தே தழைகளை பறித்து விற்பனை செய்யப்படுகிறது. வருடத்திற்கு வருடம் உரத்தை அதிகப்படுத்தி செல்ல வேண்டும். உணவு வகைகளில் மணமூட்ட பயன்படுத்தப்படும் முக்கியமான வாசனை பயிர் கறிவேப்பிலை. மருத்துவ குணங்கள் அதிகம் உள்ளது. உணவில் உள்ள நச்சுப்பொருட்களை நீக்கும் சக்தி உள்ளது. சுண்ணாம்பு, இரும்புச்சத்து அதிகம் காணப்படுகிறது. எனவே விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கறிவேப்பிலை கன்றுகளை ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர்.

## 2 ஆயிரம் விவசாயிகளுக்கு தீவன விதைகள் இலவசம் கலெக்டர் தகவல்

நாமக்கல், : பால் உற்பத்தியை அதிகரிக்க 2ஆயிரம் விவசாயிகளுக்கு இலவசமாக தீவன விதைகள் வழங்கப்படுகிறது. இது குறித்து நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கை: நீர்ப்பாசன வசதி கொண்ட கால்நடை வளர்ப்போர் தீவன விதைகளை பெறலாம். கால் ஏக்கர் முதல் அதிகபட்சம் ஒரு ஏக்கர் வரை தீவன பயிர், பயிரிட தேவையான விதைகள் வழங்கப்படும். விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் மற்றும் சிறு, குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தீவனப் பயிர்

வளர்க்கும் நீர்ப்பாசன வசதி கொண்ட விதவைகள், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நீர்ப் பாசன வசதி, கால்நடைகளின் எண்ணிக்கை அடிப்படையில் தீவன விதை வழங்கப்படும். கால்நடைகளுக்கு பசுந்தீவனத்தை சிறு துண்டுகளாக நறுக்கி போடுவதன் மூலம் செரிமானத் திறனை அதிகரித்து, பால் உற்பத்தியை பெருக்கும் நோக்கத்தில் 180 பயனாளிகளுக்கு 75 சதவீத மானியத்தில் மின்சக்தியால் இயங்கும் புல் நறுக்கும் கருவி வழங்கப்பட உள்ளது. குறைந்தபட்சம் 4 மாடுகள், குறைந்தது அரை ஏக்கர் பசுந்தீவனம் பயிரிட்டுள்ள விவசாயிகள் இதில் பயன்பெறலாம். பயன்பெற விரும்பும் விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## மா சாகுபடி கருத்தரங்கம்

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில் மா சாகுபடி கருத்தரங்கம் நடைபெற்றது. பையூர் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் புத்தர் தலைமை தாங்கினார். மா உற்பத்தியாளர் சங்க தலைவர்கள் நாகு நக்கீரன், புலவர் கிருஷ்ணன் முன்னிலை வகித்தனர், மண்டல ஆராய்ச்சி நிலைய டாக்டர்கள் கல்பனா, ஸ்ரீ வித்யா, சாலுதீன், சாந்தாகுமார், ஜெயகோபி சண்முகம், முதுநிலை மண்டல மேலாளர் மாதைய்யன், நாகரஜீனா, அக்ரி மேலாளர்கள் ஸ்டீபன், நிக்சன், சுப்பிரமணி, முருகன், சக்திகுமார், ஆகியோர் கலந்து கொண்டு மா சாகுபடியில் உயர் தொழில்நுட்பம் குறித்து விளக்கி கூறினர். சேலம் அருள்பிரகாஷ் வரவேற்றார். அக்ரி மதன் நன்றி கூறினார்.

## தென்னை, நெற்பயிரில் பூச்சி கட்டுப்படுத்தும் முறை

உடுமலை, : மடத்துக்குளம் வட்டார வேளாண் மை உதவி இயக்குனர் செல்வராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மடத்துக்குளம்

வட்டாரத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது தென்னை மரங்களில் கருந்தலைப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இப்பூச்சியின் தாக்குதல் நவம்பர் மாதம் முதல் மே மாதம் வரையும், பருவ மழைக்குப் பின் ஆகஸ்ட் முதல் நவம்பர் வரையும் காணப்படும். அனைத்து வயதுடைய தென்னை மரங்களையும் தாக்கும். கோடை காலத்தில் இந்த புழுக்களின் உற்பத்தி அதிகமாக காணப்பட்டால் எக்டருக்கு ஒட்டுண்ணிகளான பெத்திலிட் 3 ஆயிரம் என்ற அளவிலும், பிரகோனிட் 4500 என்ற அளவிலும் விட வேண்டும். ஓட்டுண்ணி பொறி மூலம் ஒட்டுண்ணிகளை மரததில் விட வேண்டும். இவற்றை மரத்தின் உச்சியில் விடக்கூடாது. இலைகளில் கருந்தலைப்புழு முதல் இரு நிலைகளில் காணப்பட்டால், எக்டருக்கு பெத்திலிட் என்ற புழு ஒட்டுண்ணியை 3 ஆயிரம் அல்லது 1:8 (கருந்தலைப்புழு ஒட்டுண்ணி) என்ற அளவில் விட வேண்டும். தாக்கப்பட்ட இலைகளை வெட்டி எரித்து விட வேண்டும். இள மரங்களில் இந்த புழுக்களின் சேதம் காணப்பட்டால் மாலத்தியான் 50 சதம், ஒரு மில்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மானோ குரோட்டோபாஸ் 36 சதம் மருந்து 10 மில்லியுடன் 10 மில்லி தண்ணீர் கலந்த வேர் மூலம் செலுத்தலாம். மருந்து செலுத்திய 45 நாட்கள் கழித்துதான், இளநீர் மற்றும் தேங்காய்களை பறிக்க வேண்டும். தற்போது அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிரில் நெற்பழம் நோய் பரவலாக காணப்படுகிறது. இதனால் மகசூல் பாதிக்கப்படும். இந்நோய் அறிகுறி தென்படும் முன் டில்ட் 0.1 சதம் அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 500 கிராம் ஒரு ஏக்கருக்கு என்ற அளவில் பூக்கும் தருணத்திலும், 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். சூடோ மோனாஸ் என்ற பூஞ்சாண மருந்தினை ஏக்கருக்கு 400 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நெற்பழம் பாதிப்பு காணப்படும் வயல்களில் ஒரு டாங்கிற்கு

30 கிராம் காப்பர் ஹைட்ராக்சைடு ஒட்டுப்பசையுடன் கலந்து தெளிக்கலாம். மேலும் அமராவதி பழைய ஆயக்கட்டு பகுதிகளில் நெல் அறுவடைக்குப்பின் தற்போது திறந்து விடப்பட்டுள்ள நீரினை பயன்படுத்தி விவசாயிகள் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யலாம். மடத்துக்குளம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உயர் விளைச்சல் ரக உளுந்து விதைகள் ஏடிடி 5 மற்றும் வம்பன் 4 சுமார் 3 ஆயிரம் கிலோ மற்றும் கோசபி 7 தட்டைப்பயறு 700 கிலோ இருப்பில் உள்ளது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## <u>கோத்தகிரியில் வரத்து அதிகரிப்பால் ஆரஞ்சு விலை வீழ்ச்சி</u>

கோத்தகிரி, : கோத்த கிரி பகுதியில் ஆரஞ்சு பழங்களின் வரத்து அதிகரித்துள்ளதால் அதன் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் ஜனவரி முதல் மார்ச் வரை ஆரஞ்சு பழங்களின் விலை வழக்கமாக சமவெளி பகுதி களை விட சற்று அதிகமாகவே இருக்கும். சம வெளி பகுதிகளில் இருந்து கோத்தகிரிக்கு வரும் ஆரஞ்சு பழங்கள் கிலோ ஒன்றுக்கு ரூ.80 முதல் ரூ.120 வரை விற்கப்படும். மலை பிரதேசத்தில் விளை யும் ஆரஞ்சு பழங்கள் பச்சை நிறத்தில் சிறிய அள வில் இருக்கும். இவ்வகை ஆரஞ்சு பழங்கள் கிலோ ஒன்றுக்கு ரூ.50 முதல் ரூ.70 வரை வியாபாரிகள் விற்பனை செய்வார்கள். கோடை வெயிலில் ஆரஞ்சு பழங்களின் வரத்து இவ்வருடம் 2 மட ங்காக அதிகரித்துள்ளது. கோவை, திருப்பூர், திண்டுக்கல் பகுதியிலிருந்து வாகனங்களில் ஆரஞ்சு பழங்களை கொண்டு வரும் வியாபாரிகள் கிடைத்த விலைக்கு சிறு பழ வியாபாரிகளிடம் விற்று விடுகின்றனர். தற்போது மலை மாவட்டத்தில் விளையும் ஆரஞ்சுப் பழங்கள் ரூ.30 முதல் ரூ.40க்கும், வெளி மாவட்ட ஆரஞ்சு பழங்கள் கிலோ ஒன்றுக்கு ரூ.40 முதல் ரூ.50 வரை மட்டுமே விற்பனை செய்யபடுகிறது. ஆரஞ்சு பழங்களை நீண்ட நாட்களுக்கு வைத்து விற்பனை செய்ய முடியாது என்பதால் பழ வியாபாரிகள் 2 கிலோ ஆரஞ்சு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு அரை கிலோ முதல்

ஒரு கிலோ வரை இலவசமாக வழங்கி விற்பனையை பெருக்கி வருகின்றனர்.

## <u>செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 26 டன் சின்னவெங்காயம் ரூ.4 லட்சத்திற்கு ஏலம்</u>

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 26 டன் சின்ன வெங்காயம் ரூ.4 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. இதுகுறித்து பெரம்பலூர் கலெக்டர் தரேஸ்அஹமது தெரிவித்திருப்பதாவது: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முலம் 1ம்தேதி திறந்த முறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் குரும்பலூர், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், சத்திரமனை, பொம்மனப்பாடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 91 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்த முறை ஏலத்திற்குக் கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதில் ஈரோடு, தென்காசி, திண்டுக்கல், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், சத்தி ரமனை பொம்மனப்பாடி, தேனூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 12 வியாபாரிகள் 350 மூட்டை, அதாவது 26,143 கிலோ சின்ன வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். இந்த ஏலத்தில் சின்னவெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ.30.50க்கும், விதை வெங்காயம் அதிகப்பட்சமாக கிலோ ரூ.36க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ.15க்கும் விற்பனையானது. இதன்மூலம் ரூ.3,99,385க்கு விற்பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளுக் கும் அன்றே பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. செட்டிக்குளம் வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்தமுறை ஏலம் நடைபெற்று வருகிறது. எனவே விவசாயி கள் தங்களது வெங்காய விளைபொருளை நன்கு சுத்தப்படுத்தி, தரம் பிரித்து இன்று (3ம்தேதி) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குள்

கொண்டுவந்து விற்பனை செய்து பயன்பெறலாம். இவ்வா அவர் தெரிவித்துள்ளார்.

## முந்திரி சாகுபடியில் தேயிலை கொசு தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி?

அரியலூர், : சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் ராஜ்கலா வெளியிட்டுள்ள அறிக்கை: அரியலூர் மாவட்டத்தில் 27,671 ஹெக்டேரில் விவசாயிகள் முந்திரி சாகுபடி செய்துள்ளனர். முந்திரியில் சேதத்தை உண்டாக்கி மகசூலை குறைக்கும் தேயிலைக்கொசுவின் தாக்குதலை கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமாகும். இப்பூச்சியானது இளந்தளிர்(டிசம்பர்- ஜனவரி), பூங்கொத்து( ஜனவரி-பிப்ரவரி) மற்றும் பிஞ்சு (பிப்ரவரி-மார்ச், ஏப்ரல்) ஆகிய பருவங்களில் தாக்கும். தேயிலைகொசுவானது சிவப்பும், பழுப்பும் கலந்த நிறத்தில் இருக்கும். பார்பதற்கு கொசுபோன்ற தோற்றத்தடன் நடுவயிற்றில் பட்டையாக வெள்ளை நிற அடையாளத்தோடு காணப்படும். இதன் குஞ்சுகள் சிவப்பு எறும்பு போன்று இருக்கும். இதன் தாய் பூச்சிகள் சுமார் 60-80 முட்டைகளை சதைப்பற்றான புதிதாக துளிர்விடும் தண்டுப்பகுதியில் இடும். முட்டையிலிருந்து 5-7 நாட்கள் இளம்பூச்சிகள் வெளிவரும். 10-12 நாட்க ளில் 4 மறை தோல் உதிர்த்து பின் முழு வளர்ச்சி பெற்ற பூச்சிகளாக மாறிவிடும். வளர்ச்சியடைந்த தேயிலைக்கொசு மற்றும் அதன் குஞ்சுகளும் தளிர்கள், பூங்கொத்து மற்றும் பிஞ்சுகளில் நச்சுத்தன்மைகொண்ட உமிழ்நீரை உள்ளே செலுத்தி சாற்றை உறிஞ்சுவதால் காய்ந்து கருகிவிடும். தாக்கப்பட்ட தளிர்களில் சிறுசிறு கரும்புள்ளிகள் தோன்றி பின் தளிர் முழுவதும் காய்ந்துவிடும். பூங்கொத்துகள் தீயினால் கருகியது போல் இருக்கும். பிஞ்சுகளில் கறுப்பு நிற தழும்புகள் காணப்படும். இதன் பாதிப்பு அதிகமாகும்போது கிளைகள் முழுவதும் கருகி காணப்படும். இப்பூச்சியின் தாக்குதல் நவம்பர் முதல் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கும். இப்பூச்சியினைகட்டுப்படுத்த முந்திரி

தோப்பில் முளைத்து வரும் வேப்பக்கன்றுகளை அகற்றி விட வேண்டும். சிவப்பு எறும்புகள் இப்பூச்சியினை செம்மையாக கட்டுப்படுத்தக்கூடியது. எனவே அவைகளை பாதுகாக்க வேண்டும். தேவைகேற்ப ரசாயன மருந்துகளை தெளிக்கலாம். டிசம்பர், ஜனவரி மாதத்தில் முந்திரி துளிர்விடும் தருணத்தில் புரோபனபாஸ்(50) மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் மருந்து இலைகளில் நன்கு ஒட்டுவதற்கு காதிசோப்பு கலந்து தெளிப்பது அவசியம். இதேபோல் 2,3 என பிப்ர வரி, மார்ச், ஏப்ரல் வரை தெளிக்கவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் தேயிலைக்கொசு தாக்குத லை கட்டுப்படுத்தி முந்திரியில் அதிக மகசூல் பெற லாம். மேலும், சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம் என வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுனர் தெரிவித்துள்ளார்.

## <u>நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி?</u>

கறம்பக்குடி, : நிலக் கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது எப்படி? என்பது குறித்து விளக்கம் அளித்துள்ள கறம்பக்குடி வட்டார வேளாண் உதவி இயக்குநர் மனோகரன், இவற்றை அதிக அளவில் சாகுபடி செய்யுமாறு விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட் டம், கறம்பக்குடி வட்டாரத்தில் தற்போது நிலக்கடலை சாகுபடி பரவலாக செய்யப்பட்டு வருகிறது. இதில் மகசூலை அதிகரிக்க உரிய தொழில்நுட்ப முறையை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக, நிலக்கடலை யில் 2ம் களை எடுக்கும் தருவாயில் ஜிப்சம் 1 ஏக்கருக்கு 80 கிலோ வீதம் தூவி மண் அணைத்தால் நிலக்கடலையானது வேரில் திரட்சியாக வளர்ந்து நல்ல மகசூலைத் தரும். இதற்குத் தேவையான அளவுக்கு விவசாயிகளுக்கு வழங்குவதற்கு கறம்பக்குடி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் ஜிப்சம் கணிச மான அளவில் இருப்பு

வைக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கறம்பக்குடி வேளாண் விரிவாக்க மையத்தில் 50 சதவிகித மானிய விலையில் ஜிப்சம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, இதை விவசாயிகள் தேவையான அளவுக்கு பெற்று பயன்பெறலாம். அத்துடன் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஆயில் எஞ்சின் நபருக்கு ரூ.10 ஆயிரம் வீதம் மானியத்தில் அளிக்கப்படுகிறது. இதையும் தேவைப் படும் விவசாயிகள் பெற்று பயன்பெறலாம். மேலும் விவரங்களை கறம்பக்குடியில் இயங்கி வரும் வேளாண் விரிவாக்க மையத்தை விவசாயிகள் நேரடியாக அணுகி தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## <u>நெல் விதைப்பண்ணைக்கான வழிமுறைகள் விதைச்சான்று உதவி இயக்குனர் அறிவுரை</u>

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் தரமான சான்று பெற்ற நெல் விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு வேளாண்துறை, விதைச்சான்று மற்றும் அங் ககச் சான்றுத்துறை இணை ப்புடன் விதைச்சான்று நடைமுறைகளை செயல்படுத்தி 392 ஹெக்டேரில் விதைப்பண்ணைகள் பல் வேறு கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விதைப் பண்ணைகளில் ஐஆர் 36, ஆடுதுறை 36, ஆடுதுறை 39, ஆடுதுறை 45, கோயமுத்தூர் 50, சம்பா மசூரி, நெல்லூர் மசூரி, மேம்படுத்தப்பட்ட பொன்னி, அண்ணா 4 ஆகிய நெல் ரக ங்களில் விதைப்பண்ணைகள் அமைக்கப் பட்டுள்ளன. தற்சமயம் விதைப் பண்ணைகளில் அறுவடைப்பணிகள் நடந்து வருகிறது. நெல் அறுவடைப்பணிகள் பெரும்பாலும் அறுவடை இயந்திரத்தின் மூலம் நடக்கிறது. விதைப்பண்ணை நெல்லை அறுவடை செய் யும் பொழுது கூடுதல் கவனத்துடன் பிற ரக விதைகள் இயந்திரங்கள் மூலம் கலக் காத வண்ணம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரே அறுவடை இயந்திரத்தை கொண்டு பல்வேறு ரக நெற்பயிர்களை அறு வடை செய்வதால் ஒரு ரக

விதைகள் மற்றொரு ரக விதைகளுடன் அறுவடை இயந்திரம் மூலம் கலக்க அதிக வாய்ப்பு உள்ளது. இத னை தவிர்க்கும் பொருட்டு விதைப்பண்ணைகளை அறுவடை செய்யும் முன் அறுவடை இயந்திரத்தில் உள்ள டிரம்மை சுத்தம் செய்ய வேண்டும். மேலும் அறுவடை செய்யும் பொழுது முதலில் அறுவடையாகும் நெல் மணிகளில் குறைந்தபட்சம் ஒன்று அல்லது இரண்டு சாக் குப்பை அளவுக்கு விதை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளாமல், அதை தானிய பயன்பாட்டிற்கு வைத்துக் கொள்ள வேண் டும். மேலும் விதைப்பண்ணை விவசாயிகள், சம்பந்தப்பட்ட வேளா ண்மை உதவி இயக்குநர்கள் மூலம் வழங்கப்பட்ட புதிய சாக்குப்பைகளை மட்டும் பயன்படுத்த வேண்டும். அறுவடை செய்யப்பட்ட நெல்லில் ஈரப்பதம் 13 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். இதனை உறுதி செய்ய விதை மாதி ரியை அருகில் உள்ள விதை சுத்தி நிலையத்திற்கு கொண்டு சென்று, ஈரப்பதத்தை சரிபார்த்த பின் விதை குவியலை விதை சுத்திநிலையத்திற்கு கொண்டு வர வேண்டும். ஈரப்பதம் 13 சதவீதத்திற்கு அதிகமாக இருந்தால் தங்கள் கிராமத்தில் உள்ள கலத்தில் காயவைத்த பின்னர் விதை சுத்தி நிலையத்திற்கு கொண்டு வர வேண்டும் என ராமநாதபுரம் மாவட்ட விதைச் சான்று உதவி இயக்குனர் சேக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

**<u>தூத்துக்குடி மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தை மாணவர்கள் பார்வை</u>**

தூத்துக்குடி,: தூத்துக் குடி மத்திய கடல் மீன் ஆய்வு நிலையத்தை ஏராள மான பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் ஆர்வமுடன் பார்வை யிட்டனர். தூத்துக்குடி தெற்கு கடற்கரை சாலையில் ரோச் பூங்கா அருகே மத்திய கடல்மீன் வள ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. கடல் மீன் வளம், சிப்பி மற்றும் கடல் சங்கு வகைகளை ஆய்வகத்திலேயே இனப்பெருக்கம் செய்து வளர்த்தல், முத்து வளர்ப்பு உள்ளிட்ட ஆராய்ச்சிப் பணிகள் இங்கு நடைபெற்று வருகின்றன. மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிலைய தினத்தை முன்னிட்டு நேற்று ஒரு நாள் மட்டும்

பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் தொழில் முனைவோர் பார்வைக்கு திறந்துவைக்கப்பட்டிருந்தது. இதற்கான துவக்க நிகழ்ச்சியில் மாநகராட்சி கமிஷனர் மதுமதி தலைமை வகித்து துவக்கி வைத்தார். மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி மதன் முன்னிலை வகித்தார். விஞ்ஞானிகள் ஜெகதீஷ், சிவதாஸ், ஆஷா, கவிதா, ரஞ்சித், சுஜா உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர். இதில் நெல்லை, தஞ்சை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து வந்திருந்த பல்வேறு பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர் ஆய்வு மையங்களில் வளர்க்கப்பட்டு வரும் கடல் வாழ் உயிரினங்களை பார்வையிட்டனர். காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையில் ஒரே நாளில் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் இந்த ஆய்வு நிலையத்தை கண்டு களித்து கடல்வாழ் உயிரிகள் குறித்த விளக்கங்களையும் அறிந்து கொண்டனர். ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே இந்த அனுமதி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஏற்றுமதி செய்யும் வகையில் பட்டுக்கூடு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் சப்-கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜெகடே பேச்சு**

மல்பெரி சாகுபடி விவசாயிகள் ஏற்றுமதி செய்யும் வகையில் பட்டுக்கூடு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று சப்-கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜெகடேபேசினார்.கருத்தரங்கு

பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி ஆள் கொண்டான் அரங்கில் உடுமலை மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி விரிவாக்க மையம், தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சி துறை ஆகியவை சார்பில் தரமான வெண்பட்டு உற்பத்திக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு பொள் ளாச்சி சப்-கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜெகடே தலைமை தாங்கினார். கல்லூரி

முதல்வர் பத்ரி நாராயணன், பட்டு வளர்ச்சி துறை பொள்ளாச்சி தொழில் நுட்ப சேவை மைய உதவி ஆய் வாளர் அழகு ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித் தனர். மத்திய பட்டு வாரிய உடுமலை ஆராய்ச்சி விரி வாக்க மைய விஞ்ஞானி புனித வதி வரவேற்று பேசினார். கருத்தரங்கில் சப்-கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜெகடே பேசும் போது கூறியதாவது:- ஆராய்ச்சி செய்ய வேண்டும். பட்டு வளர்ப்பு தொழிலில் பெண்கள் அதிகளவு ஈடுபடு வது பாராட்டுக்குரியது. பட்டு வளர்ப்பில் உள்நாட்டு தேவையை தவிர, வெளிநாடு களுக்கு ஏற்றுமதிக்காகவும் பட்டுக்கூடு உற்பத்தியை அதிகரிக்க மல்பெரி சாகுபடி விவசாயிகள் முயற்சி எடுக்க வேண்டும். பருவநிலை மாற்றம் மற்றும் மண் மாறுதலுக்கு ஏற்ப மல் பெரி சாகுபடி குறித்து மாணவ- மாணவிகள் ஆராய்ச்சி செய்ய வேண்டும். உடுமலை, பொள்ளாச்சி பகுதி யில் அதிக அளவில் மல்பெரி சாகுபடி நடைபெற்று வரு கிறது. இதன் மூலம் ஆண்டு முழுவதும் பட்டுக்கூடு உற்பத்திசெய்யலாம்.

இடுபொருட்கள்

மல்பெரி சாகுபடிக்கு தேவைக்கான இடுபொருட் களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதுடன், பட்டு வளர்ப்பு லாபகரமானது என்பதை அனைவருக்கும் எடுத்துரைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். வேளாண்மைக்கல்லூரி பூச்சியியல் துறை உதவி பேராசிரியை மஞ்சுளா மல்பெரி சாகுபடி , பட்டுக்கூடு உற்பத்தி செய்வதில் உள்ள தொழில் நுட்பங்களை விளக்கி பேசினார். கருத்தரங்கில் பட்டு விவசாயிகள் சந்திர சேகரன், ராஜன், செல்வராஜ், கோகிலவேணி, தங்கவேல் ஆகியோர் பேசினார்கள். கருத்தரங்கில் மத்திய பட்டு வாரிய விஞ்ஞானிகள் சந்திர சேகரன், பாபு, உடுமலை தொழில் நுட்ப சேவை மைய உதவி ஆய்வாளர் மூர்த்தி, விலங்கியல் துறைத்தலைவர் தனலட்சுமி, பொள்ளாச்சி தொழில்நுட்ப சேவை மைய இளநிலை ஆய்வாளர்கள் பரீதா, முருகன் மற்றும் பட்டு விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் இள நிலை ஆய்வாளர் சமுத்திர பாண்டி நன்றி கூறினார். கருத்தரங்கை

யொட்டி பட்டுபுழு வளர்ப்பு குறித்த கண்காட்சி இடம் பெற்றது. இதை சப்-கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜெகடே மற்றும் மாணவ-மாணவிகள் உள்பட பலர் பார்வையிட்டனர்.

**ஈரோடு மாவட்டத்தில் 9–ந் தேதி முதல் கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் மாவட்ட கலெக்டர் தகவல்**



ஈரோடு, கோழிகளுக்கு இறப்பை ஏற்படுத்தும் ராணிக்கெட் எனப்படும் வெள்ளைக்கழிச்சல் நோய் கோழி வளர்ப்பவர்களுக்கு பெரும் இழப்பை உண்டாக்கி வருகிறது. இதன்காரணமாக கோழி வளர்ப்பவர்களுக்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. இதனை தடுக்கும் பொருட்டு தமிழக கால்நடை பராமரிப்பு துறை சார்பில் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் வருகிற 9–ந் தேதி (திங்கட்கிழமை) முதல் 22–ந் தேதி வரை ஈரோடு மாவட்டம் முழுவதும் மாலை நேரங்களில் நடைபெறுகிறது. இந்த முகாமில் கோழி வளர்ப்பவர்கள் கலந்து கொண்டு தாங்கள் வளர்க்கும் கோழிகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம். மேலும் இதுதொடர்பான விவரங்களை அறிய அருகில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரியை கோழி வளர்ப்பவர்கள் அணுகலாம். இந்த தகவலை மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் தெரிவித்து உள்ளார்.

**மருத்துவ குணங்கள் நிறைந்த ‘ஒற்றைப்பல்’ பூண்டு மதுரை மார்க்கெட்டில் விற்பனைக்காக வந்து குவிந்தது**



மருத்துவ குணங்கள் நிரம்பிய 'ஒற்றைப்பல்' பூண்டு மதுரை மார்க்கெட்டில் விற்பனைக்காக வந்து குவிந்துள்ளது. மலைப்பூண்டு

ஒருதலைப்பூண்டு அல்லது ஒற்றைப்பல் பூண்டு என அழைக்கப்படும் மலைப்பூண்டு, குளிர்பிரதேசங்களான கொடைக்கானல், ஊட்டி போன்ற மலைப்பிரதேசங்களில் அதிக அளவு விளைகின்றன. கடந்த சில வருடங் களுக்கு முன்பு திண்டுக்கல் பகுதியிலும் சாகுபடி செய்யப்பட்டது. இப்போது அங்குள்ள விவசாயிகள் ஒருதலைப்பூண்டு விவசாயத்தை கைவிட்டுவிட்டனர். பொதுவாக, வெள்ளைப்பூண்டு பல பற்கள் சேர்ந்து ஒருசேர இருக்கும். ஆனால் இது ஒற்றைப்பல்லுடன் பார்ப்பதற்கு வெள்ளை நிற சின்னவெங்காயம் போல் இருக்கும். இந்த வகை பூண்டு, தற்போது மதுரை கீழமாசிவீதி மொத்த வியாபார கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளது. இந்த வகை பூண்டில் சாதாரண பூண்டு வகையில் இருப்பதை காட்டிலும் கூடுதல் மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளதாக முதியோர் கூறுகின்றனர். தை, மாசி

இந்த பூண்டு வரத்து குறித்து வியாபாரி ஜெயமுருகன் கூறியதாவது:- இந்த வகை பூண்டு வருடத்தில் தை, மாசி மாதங்களில் மட்டுமே அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு வரும். மத்தியபிரதேச மாநிலத்தில் இருந்தும் தற்போது வருகிறது. ஒரு கிலோ பூண்டு சில்லறை விலையில் ரூ.290-க்கு விற்பனையாகிறது. இதில் மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன. ஒருதலைப்பூண்டு தொடர்ந்து சாப்பிட்டு வர, நரம்புகள் சுறுசுறுப்படையும். ரத்த ஓட்டம் சீராகும். ஒற்றைத் தலைவலியை நீக்கும். முதியவர்களுக்கு அதிக சக்தி கொடுக்கக் கூடியது என்பதால், ஒருதலைப்பூண்டுக்கு கிராக்கி அதிகம். சாதாரண வகை பூண்டு மொத்தவிலையில் ஒருகிலோ ரூ.150 முதல் 180 ரூபாய் வரை விலைபோகிறது. இதனை காட்டிலும் ஒருதலைப்பூண்டு கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# போடியில் இலவம் பஞ்சு விலை கிடு, கிடு உயர்வு கிலோ ரூ.98–க்கு விற்பனை



போடி, தேனி மாவட்டம் போடியில் விவசாய தொழிலை மட்டுமே வாழ்ந்து வருகின்றனர். இதில் போடி மேற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் மா, தென்னை, இலவம் தோட்டங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அவற்றில் இலவம் மரங்கள் மலையடிவாரத்தையொட்டி உள்ள பகுதிகளில் அதிக அளவு வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த இலவம் மரங்களில் ஏப்ரல், மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் இலங்காய் கள் பறிக்கப்படுகின்றன. தற்போது இந்த இலவங்காய்களில் இருந்து பஞ்சுகளை பிரித்து எடுத்து விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு விதையுடன் கூடிய இலவம் பஞ்சு ஒரு கிலோ ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை ஆகியது. இதே போல் விதை நீக்கப்பட்ட இலவம் பஞ்சு ஒரு கிலோ ரூ.170 முதல் ரூ.200 வரை விற்கப்பட்டது. இந்த இலவம் பஞ்சு படிப்படியாக கிடு, கிடுவென விலை உயர்ந்து வருகிறது. கடந்த மாதம் ரூ.86–க்கு விற்கப்பட்ட இலவம் பஞ்சு ரூ.98–க்கு விற்பனை ஆகிறது. விதை நீக்கப்பட்ட தரமான இலவம் பஞ்சு கிலோ ரூ.300–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வியாபாரி ஒருவரிடம் கேட்ட போது, ‘இலவம் பஞ்சு தட்டுபாடு என்ற நிலை உருவாகி உள்ளது. மேலும் கடந்த ஆண்டு பறிக்கப்பட்ட இலவம் பஞ்சுகளை இருப்பு வைத்து விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். இதனால் விலை உயர்ந்து காணப்படுகிறது. இதுவரை வியாபாரத்தில் இல்லாத அளவுக்கு விலை உயர்ந்து காணப்படுகிறது’ என்றார்.

<u>215 பேருக்கு விலையில்லா ஆடுகள் இணை இயக்குனர் செல்வராஜ் வழங்கினார்</u>



போளூர் அரசு கால்நடை மருத்துவமனையில் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா நடந்தது. விழாவிற்கு கால்நடைத்துறை உதவி இயக்குனர் டாக்டர் செல்லன் தலைமை தாங்கினார். உதவி இயக்குனர் டாக்டர் மணி முன்னிலை வகித்தார். இதில் இணை இயக்குனர் செல்வராஜ் கலந்து கொண்டு நலத்திட்டங்கள் குறித்து சிறப்புரை யாற்றினார். பின்னர் போளூர் அருகேயுள்ள சாலையனூர், பூண்டி, பெரணம்பாக்கம், எஸ்.யூ.வனம் ஆகிய 4 கிராமங்களை சேர்நத 215 பேருக்கு விலையில்லா ஆடுகளை வழங்கினார். இந்த விழாவில் கால்நடை மருத்துவர்கள் கிருஷ்ணகுமார், அரிகுமார் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.